**செப்டம்பர் – 17**

# TNPSC துளிகள்

- துபாயில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு மகளிர் இருபது20 (டி20) ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில், இலங்கை அணியை 72 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்தியா, சாதனை அளவாக எட்டாவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.
- மெக்சிகோவில் உள்ள சால்டில்லோவில் நடைபெற்ற உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய ஆடவர் ரிகர்வ் வில்வித்தை வீரர் என்ற பெருமையை இந்தியாவின் தீரஜ் பொம்மதேவரா பெற்றார்.
- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று இந்தி தினத்துடன், 6வது அகில இந்திய அலுவல் மொழி மாநாடு மும்பையில் நடைபெற்றது.
    - இந்த மாநாட்டில் இந்தி மொழியின் வளர்ச்சி, இந்திய மொழிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, தொழில்நுட்பம், மொழிபெயர்ப்பு மற்றும் இலக்கியம் குறித்து விவாதிக்கப்பட்டது.
- பெங்களூருவில் நடைபெற்ற குளோபல் செஸ் லீக் (GCL) தொடரில், நடப்பு சாம்பியனான ஆல்பைன் APL பைப்பர்ஸ் அணியை வீழ்த்தி கங்கை கிராண்ட் மாஸ்டர்ஸ் அணி தங்களது முதல் பட்டத்தை வென்றது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் நிகழ்நேர இருப்பிடக் கண்காணிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி அதன் 1033 தேசிய நெடுஞ்சாலை உதவி எண்ணை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.
    - 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 1033 உதவி எண் 24 மணிநேரமும் செயல் படுகிறது மற்றும் 1.46 லட்சம் கிலோமீட்டருக்கும் அதிகமான தேசிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கியுள்ளது.
- மிசோரம் மாநிலத்தின் டட்டாஃப்ரைனஸ் பாவங்புய் (Duttaphrynus phawngpui) மற்றும் இன்ஜெரானா ஐஸ்வால் (Ingerana aizawl) ஆகியன அறிவியல் உலகிற்கு புதிய இரண்டு தவளை இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
    - டட்டாஃப்ரைனஸ் பாவங்புய் தவளையானது பாவங்புய் தேசிய பூங்காவில் 2,000 மீட்டருக்கு மேல் காணப் பட்டது மற்றும் மிசோரமின் மிக உயர்ந்த சிகரமான பாவங்புய் என்பதன் நினைவாக பெயரிடப் பட்டது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதிய மனநலப் பாதுகாப்பு விதிமுறைகள் 2026

- தமிழ்நாடு மாநில மனநலப் பாதுகாப்பு விதிமுறைகள், 2026-ஐ தமிழ்நாடு அரசு அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.
- இந்த விதிமுறைகள் மனநலக் காப்பகங்களில் உள்கட்டமைப்பு, பணியாளர்கள், தொழில் முறை தகுதிகள் மற்றும் நோயாளர் பராமரிப்பு ஆகியவற்றுக்கான குறைந்தபட்ச தரங்களை நிர்ணயிக்கின்றன.
- மனநலக் காப்பகங்கள் மனநலப் பிரிவுகள், போதை மீட்பு மையங்கள் மற்றும் உளவியல் மறுவாழ்வு மையங்கள் உட்பட ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டு உள்ளன.
- உடனடி பாதிப்பைத் தடுக்க மட்டுமே உடல்ரீதியான கட்டுப்பாடு அனுமதிக்கப் படுகிறது மற்றும் அதற்கு மனநல மருத்துவரின் ஒப்புதல் பெறப்பட்டு முறையாக

ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

❖ குடும்பத்தினர் வருகை, தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் நோயாளிகளுக்கான குறைகேட்பு பொறிமுறை ஆகியவற்றுக்கு இவ்விதிகள் வகை செய்கின்றன.




# தேசியச் செய்திகள்

## ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பு




❖ ஒருங்கிணைந்த உர மேலாண்மை அமைப்பானது (iFMS) வெளிப்படைத்தன்மை, உரம் கிடைப்பது மற்றும் விநியோகச் சங்கிலி கண்காணிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான டிஜிட்டல் கருவிகளுடன் ஒரு புதிய கட்டத்தில் நுழைந்துள்ளது.

❖ புதிய தகவல் பலகைகள் தேசிய, மாநில, மாவட்ட மற்றும் சில்லறை விற்பனையாளர் நிலைகளில் உர உற்பத்தி, இறக்குமதிகள், அனுப்புதல்கள், திட்டம், இருப்புக்கள் மற்றும் சில்லறை விற்பனை ஆகியவற்றைக் கண்காணிக்கின்றன.

❖ iFMS ஆனது 14 கோடிக்கும் அதிகமான ஆதார் இணைக்கப்பட்ட உர வாங்குபவர்கள், 2.5 லட்சத்துக்கும் அதிகமான சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் ஆண்டுக்கு சுமார் 7 கோடி மெட்ரிக் டன் உரப் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது.

❖ வாங்குபவர் வகை, நிலப்பரப்பு, பயிர், மாவட்டம் மற்றும் உரத்தின் வகை

ஆகியவற்றின் அடிப்படையில் உரக் கொள்முதலைப் பகுப்பாய்வு செய்ய இந்த அமைப்பு பரிவர்த்தனை தரவைப் பயன்படுத்துகிறது.

- ஆண்டுக்கு சுமார் ₹2 லட்சம் கோடி மதிப்பிலான உர மானியங்களை நிர்வகிப்பதற்கும் iFMS துணை புரிகிறது.

## டெம்பஸ்ட் திட்டம் - இந்தியா

- இங்கிலாந்து, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் டெம்பஸ்ட் என்ற ஆறாவது தலைமுறை போர் விமானத் திட்டத்தில் இந்தியா ஒரு உரையாடல் கூட்டாளராக இணைந்துள்ளது.
- டெம்பஸ்ட் என்பது இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் இத்தாலி ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்படும் ஆறாவது தலைமுறை போர் விமானத் திட்டமாகும், இது 2034 ஆம் ஆண்டில் படைகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் உரையாடல் கூட்டாளர் அந்தஸ்து திட்டத்தின் தொழில்நுட்பம், முன்னேற்றம் மற்றும் திறன்கள் குறித்து விவாதிக்க அனுமதிக்கிறது, ஆனால் இந்தியாவை வாங்குபவராகவோ அல்லது உருவாக்குபவராகவோ மாற்றாது.
- இந்தியா தற்போது மேம்பட்ட நடுத்தரப் போர் விமானத்தை (AMCA) உருவாக்கி வருகிறது, இது ஐந்தாவது தலைமுறை போர் விமானமாகும், இது 2035 ஆம் ஆண்டிற்குள் இந்திய விமானப்படையில் சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- டெம்பஸ்ட் திட்டம் அதன் முழு அளவிலான வடிவமைப்பு கட்டத்தை முன்னெடுக்க 6.1 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியைப் பெற்றுள்ளது.




## உலகளாவிய ஃபின்டெக் திருவிழா 2026

- 7வது உலகளாவிய ஃபின்டெக் திருவிழா (GFF) மும்பையில் நடைபெற்றது.
- GFF 2026-இன் கருத்துரு “Potential to Impact: Agentic Artificial Intelligence (AI), Tokenisation, Quantum” என்பதாகும்.
- இங்கு விவாதிக்கப்பட்ட மூன்று முக்கிய தொழில்நுட்பங்கள் செயல்பாட்டுத் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு, குறியாக்கம் மற்றும் குவாண்டம் தொழில்நுட்பம் ஆகும்.
- இதன் முதன்மை அமைப்பாளர்கள் இந்தியக் கொடுப்பனவு மன்றம் (PCI), இந்தியத்


தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) மற்றும் ஃபின்டெக் ஒருங்கிணைப்பு மன்றம் (FCC) ஆகியவையாகும்.

❖ இந்தத் திருவிழாவிற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), நிதிச் சேவைகள் துறை, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் நிதி ஆயோக் உள்ளிட்ட முகவர் அமைப்புகள் ஆதரவளிக்கின்றன.

❖ நம்பகமான, இணைக்கப்பட்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிதி அமைப்புகளை உருவாக்க வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் இந்த நிகழ்ச்சி நிரல் கவனம் செலுத்துகிறது.




## வருடாந்திரத் தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு – ஆகஸ்ட் 2026




❖ வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பின் (PLFS) படி, 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (WPR) 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 52.8% ஆக அதிகரித்துள்ளது, இது மார்ச் மாதத்திற்குப் பிறகான மிக உயர்ந்த அளவாகும்.

❖ கிராமப்புற WPR 55.8% ஆக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் நகர்ப்புற WPR 47% ஆக குறைந்துள்ளது.

❖ ஒட்டு மொத்த வேலையின்மை விகிதம் ஜூலை மாதத்தில் 5.1% ஆக இருந்ததில் இருந்து ஆகஸ்ட் மாதத்தில் 5% ஆக சற்றே குறைந்துள்ளது.

❖ கிராமப்புற வேலையின்மை 4.1% ஆகக் குறைந்துள்ளது, இது 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பிறகான மிகக் குறைந்த அளவாகும், அதே நேரத்தில் நகர்ப்புற வேலையின்மை 6.8% ஆக அதிகரித்துள்ளது.

- 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதம் (LFPR) 55.6% ஆக அதிகரித்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## மூன்று நாடுகளுக்கு இடையிலான வரலாற்று ஒப்பந்தம்

- ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவை வெஸ்ட்மின்ஸ்டரிலிருந்து அதிக சுயநிர்ணய உரிமை மற்றும் அரசியலமைப்பு மாற்றத்தை கோரும் வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தம் கார்டிப்பில் மூன்று நாடுகளின் தலைவர்களால் கையெழுத்திடப் பட்டது மற்றும் ஜனநாயக ரீதியாக தங்கள் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்று அது கூறுகிறது.
- இது ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தில் அரசியலமைப்பு மாற்றங்களை தயார் செய்து வசதி செய்து தர பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கிறது.
- இந்த ஒப்பந்தம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இருப்பிடமான வெஸ்ட் மின்ஸ்டருக்கு சவால் விடுகிறது, மேலும் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி துறைகளில் மூன்று நாடுகளுக்கு இடையே அதிக ஒத்துழைப்புக்கு அழைப்பு விடுக்கிறது.
- ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் மூன்று நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) ஒரு பகுதியாக இருக்கும் எதிர்காலத்தை ஆதரிக்கின்றனர்.




## விண்வெளிச் சுற்றுப் பாதையில் ஆயுதங்கள் - அமெரிக்கா

- அமெரிக்க விண்வெளிப் படையானது சுற்றுப்பாதையில் ஆயுதங்களை நிலை நிறுத்தி உள்ளதாக முதல் முறையாக அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.
- அமெரிக்க விமானப்படை செயலாளர் இந்த ஆயுதங்களை "சுற்றுப்பாதை விண்வெளிக் கட்டுப்பாட்டு ஆயுதங்கள்" (on-orbit space control weapons) என்று கூறினார், ஆனால் அவற்றின் வகை அல்லது நிலைநிறுத்தப்பட்ட தேதியை குறிப்பிடவில்லை.
- இந்த ஆயுதங்கள் அமெரிக்கப் படைகள் மற்றும் விண்வெளி அமைப்புகளை விரோத நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கம் கொண்டவை.
- இதன் திறன்களில் ஜாமிங் அல்லது பிற வகையான குறுக்கீடுகளுக்கான அமைப்புகள்


அடங்கும், ஆனால் சரியான தொழில்நுட்பம் வெளியிடப்படவில்லை.

❖ அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் விண்வெளி எதிர்ப்புத் திறன்களைத் தொடர்ந்து உருவாக்கி சோதித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

- US has publicly acknowledged for the first time that it has deployed offensive-capable weapons in Earth's orbit.
- US Space Force described them as "on-orbit space control weapons" that can be used for both offensive and defensive missions.
- Washington says the move is aimed at protecting US satellites from growing threats posed by Russia and China.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### உலகப் பறவைகளின் நிலை அறிக்கை




❖ பேர்ட்லைஃப் இன்டர்நேஷனல் அமைப்பின் 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் பறவைகளின் நிலை அறிக்கையானது, 45% வலசை போகும் பறவை இனங்கள் குறைந்து வருவதாகவும், ஒன்பதில் ஒன்று அழிவை எதிர்கொள்வதாகவும் கண்டறிந்து உள்ளது.


❖ இந்த அறிக்கையானது வலசை போகும் பறவைகள் மற்றும் அவை இடம்பெயர்வின் போது பயன்படுத்தும் பாதைகளான வலசைப் பாதைகளை மையமாகக் கொண்ட

முதல் பதிப்பாகும்.

- ஸ்லெண்டர் பில்டு கர்லூ/மெல்லிய அலகு உள்ளான் பறவை 2025 ஆம் ஆண்டில் அழிந்துபோனது, இது சமீபத்திய நூற்றாண்டுகளில் பிரதான நிலப்பரப்பான யூரேசியா மற்றும் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட முதல் உலகளாவிய பறவை அழிவைக் குறிக்கிறது.
- ஆக்கிரமிப்பு இனங்கள், தீவிர விவசாயம், பருவநிலை மாற்றம் மற்றும் நீடிக்க முடியாத வேட்டையாடுதல் ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- வலசை போகும் பறவைகள் மற்றும் முழு வலசைப் பாதைகள் முழுவதும் உள்ள அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நைரோபி வலசைப் பாதைகள் பிரகடனம் கையெழுத்தானது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சன்சத் ரத்னா விருதுகள் 2026




- சன்சத் ரத்னா விருதுகள் 2026-க்காக 10 மக்களவை நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2 மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 4 நாடாளுமன்ற நிலைக்குழுக்களை நடுவர் குழு தேர்ந்தெடுத்துள்ளது.
- கேள்விகள், விவாதங்கள், தனிநபர் மசோதாக்கள், குழுப் பணிகள் மற்றும் வருகை ஆகியவற்றின் அடிப்படையில் நாடாளுமன்ற செயல்பாடுகளை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- பி.பி. சவுத்ரி நான்காவது முறையாக இவ்விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 12 தனிநபர் விருது பெற்றவர்களில் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்குவர்.
- வேளாண்மை, நிதி, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் ஆகிய நான்கு குழுக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் உந்துதலால், பிரைம்

பாயிண்ட் அறக்கட்டளையால் 2010 ஆம் ஆண்டில் சன்சத் ரத்னா விருது தோற்று விக்கப் பட்டது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஜனநாயக தினம் 2026 - செப்டம்பர் 15

- ஜனநாயகத்தின் கொள்கைகளை ஊக்குவிப்பதும் வலுப்படுத்துவதும் இத்தினத்தின் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 2007 ஆம் ஆண்டில் ஒருமித்த தீர்மானத்தின் மூலம் இந்த தினத்தை நிறுவியது, மற்றும் முதல் அனுசரிப்பு 2008 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- நாடாளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம் (IPU) 1997 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஜனநாயகத்தின் மீதான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது, இது ஜனநாயகக் கொள்கைகளை உறுதிப்படுத்துகிறது.
- மனித உரிமைகளுக்கான உலகளாவியப் பிரகடனத்தின் (UDHR) சரத்து 19, தகவல்களைத் தேடும், பெறும் மற்றும் பகிர்ந்துகொள்ளும் உரிமை உட்பட கருத்து மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “When every voice counts, democracy delivers” என்பதாகும்.





## தேசியப் பொறியாளர் தினம் 2026 - செப்டம்பர் 15

- எம். விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் செப்டம்பர் 15 அன்று தேசிய பொறியாளர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- விஸ்வேஸ்வரய்யா 1861 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் முத்தேனஹள்ளியில் பிறந்தார்.
- அவர் 1912 முதல் 1918 ஆம் ஆண்டு வரை மைசூர் திவானாகப் பணியாற்றினார் மற்றும்


உள்கட்டமைப்புத் திட்டங்களில் பணியாற்றினார்.

- நீர்ப்பாசனம், நீர் மேலாண்மை மற்றும் வெள்ளப் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அவர் பங்களித்தார்.
- Planned Economy for India மற்றும் Reconstructing India உள்ளிட்ட புத்தகங்களை அவர் எழுதியுள்ளார்.
- 1955 ஆம் ஆண்டில் இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதைப் பெற்ற அவர் 1962 ஆம் ஆண்டில் காலமானார்.




# இதரச் செய்திகள்

## சரத்சந்திர சட்டோபாத்யாயின் 150 ஆண்டுகள்




- வங்காள எழுத்தாளர் சரத்சந்திர சட்டோபாத்யாய் அவரது 150வது பிறந்தநாளில் நினைவு கூரப் பட்டார்.

- 1876 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று வங்காளத்தில் உள்ள தேபானந்தபூரில் பிறந்த இவர், ஒரு வங்காள நாவலாசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர் ஆவார்.
- தேவதாஸ், ஸ்ரீகாந்தா, பரிணீதா, சோரித்ரோஹின் மற்றும் பதேர் தாபி ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க படைப்புகளாகும்.
- அவரது படைப்புகள் 19 ஆம் நூற்றாண்டின் இந்தியாவை, குறிப்பாக கிராமப்புற வங்காள சமுதாயத்தை சித்தரித்தன, மேலும் சமூகப் பிரச்சினைகள் மற்றும் பெண்களின் உரிமைகளை எடுத்துரைத்தன.
- அவர் 13 ஆண்டுகள் பர்மாவில் (மியான்மர்) வாழ்ந்தார் மற்றும் 1916 ஆம் ஆண்டில் முழு நேர எழுத்தாளராக மாறுவதற்காக கல்கத்தா திரும்பினார்.
- 1926 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதேர் தாபி (Pather Dabi), அதன் புரட்சிகரமான கருத்துரு காரணமாக பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப் பட்டது.
- அவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் இருந்து ஜகத்தாரிணி தங்கப் பதக்கத்தையும், டாக்கா பல்கலைக்கழகத்தில் இருந்து இலக்கியத்திற்கான முனைவர் (கௌரவ) பட்டத்தையும் பெற்றார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★